# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,653 — 1959 ජනවාරි 27 වැනි අඟහරුවාද — 27.1.1959

11,653 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 27 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. சீ. 282. உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு).

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கொட்டுவே முகாந்திரம் தர்மசேன ஜனயெத்தி ஆகிய யான் இக் கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11 ந் திகதியைக் கொண்ட 11,472 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட சீ.275 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் இறக்குமதியாளரின் ஆகக்கூடிய மொத்த விலை, மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலை, சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை முதலியவற்றைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் முறையே 2 ம், 3ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையும் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக் கருவாடு பற்றிய எனது விலைக் கட்டளையையும் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இறுத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து விதிக்கிறேன் ; குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிலில் விவரிக்கப்பட்ட மாசிக் கருவாட்டை இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்றலாகாது ;

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மாசிக் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) எத்தொகையான மாசிக் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய மாசிக் கருவாடு மொத்தமாக விற்கப்படின், இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமைபோல் கணக்குப்பார்க்கப் படவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்;

(4) இக்கட்டளையால் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மாசிக் கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மாசிக் கருவாட்டை தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த முதலாம் அட்டவணையில் விவரித்துள்ள மாசிக் கருவாட்டுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாய்ப் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டுமென் இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இறுத்தல் அல்லது " இறு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இறுத்தல் முறையாகக் கடுருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மாசிக் கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாசிக் கருவாட்டின் தொகை (நிறையில்) ;

(இ) விற்பனை செய்யப்பட்ட தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலையும் ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(8) இக்கட்டளையால் மாசிக் கருவாடு விற்கப்படுமிடத்து குறிப்பிட்ட அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

கொழும்பில் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ந் திகதி முற்பகல் 9.15 மணிக்குக் கையொப்பம் இடப்பட்டது.

கே. எம். டீ. ஜயனெத்தி,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

## அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| விபரம் | மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய விற்பனை விலை<br>ரூ. ச. |
| மாசிக்கருவாடு (எல்லா இரகங்களும்) .. | .. 240 00 | .. 2 40 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது